Registered as a News Paper பக்கங்கள் 6 விலை ரூபா; 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 29 (12-02-1992) புதன்கிழமை ஓசை: 359

## பயிற்சி முகாமைத்துவம்; பதவி சிவில் நிர்வாகம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிலையத்தில் பொது நிர்வாகத்துறையில் முகாமைத்துவ பயிற்சியை முடித்துக் கொண்ட 180 பட்டதாரிகளுக்கு வடக்கு கிழக்கு பகுதியில் ஏற்படும் சிவில் நிர்வாக வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்துள்ளார் வடக்கு கிழக்கைச் சேர்ந்த இவ் 180 பட்டதாரிகளில் வெற்றிடங்கள் உள்ள இடங்களுக்கு உடனடியாக 150 பேர் நியமிக்கப்படவுள்ளதா (6 ஆம் பக்கம் பார்க்க)

# காஷ்மீர் எல்லையில் நெருக்கடி: தடைகளை மீறி மக்கள் படை எடுப்பு

## 'விடுதலை' 'சுதந்திரம்' 'எல்லையை தகர்ப்போம்'

(இஸ்லாமாபாத்)

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் 'இந்திய எல்லை தாண்டும் பேரணி' திட்டமிட்டவாறு நேற்று ஆரம்பித்தது. ஆஸாத் காஷ்மீரின் தலைநகரமான முஸார்பாபாத் இருந்து புறப்பட்ட இம்மக்கள் பேரணி பலவித கட்டுப்பாடுகளையும், வீதித்தடைகளையும் மீறி இந்திய ஜம்மு - காஷ்மீர் எல்லையை நோக்கி முன்னேறிக்கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் காஷ்மீர் எல்லையில் பதற்றமும், நெருக்கடியும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேரணியை பாகிஸ்தான் அரசு தடைசெய்துள்ள போதிலும், ஆயிரக்கணக்கான போராளிகளும், ஆதரவாளர்களும் இந்திய எல்லையை நோக்கிச் சென்று கொண்டுள்ளனர்.

''விடுதலை! சுதந்திரம்'', ''எல்லையைத் தகர்ப்போம்'' என்ற சுலோகங்களைப் பேரணியினர் முழங்கிக் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள்.

மலைப் பகுதிகளில் இந்தப் பேரணி செல்லவிருக்கும் வழிகளில் உள்ள மலைசரிவுகளை பாகிஸ்தான் இராணுவத்தினர் வெடிவைத்துத் தகர்த்தனர். இதனால் பாதைகள் தடைப்பட்டன. பஸ் வண்டிகளும் பறிக்கப்பட்டன. இதனால் மலைப் பாங்கான மலைப் பள்ளத் தாக்குகளிலும், மலைச் சரிவுகளிலும் மாற்று வழிகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய இக்கட்டான ஒரு நிலை ஏற்பட்டுள்ளதாக இப் பேரணி அமைப்புச் செயலாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். இவர்களுக்கு ஆதரவாகப் பல உலங்கு வானூர்திகளும், அம்புலன்ஸ் வண்டிகளும் வந்து கொண்டிருக்கின்றன.

இந்திய ஜம்மு - காஷ்மீர் எல்லைக் கோடு அமைத்திருக்கும் பகுதிக்கு பரிதி தூரத்தி [5 ஆம் பக்கம் பார்க்க]

## போக்குவரத்து வசதியின்மை

## இலங்கை அகதிகளை அனுப்புவதில் தாமதமாம்

இலங்கை அகதிகளை தமிழ்நாடடிலிருந்து அனுப்பி வைப்பது போக்கு வரத்து வசதியின்மையால் காலதாமதமாவதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. இப்பொழுது உள்ள நடைமுறையின்படி சென்னையிலிருந்து திருக்கோணமலைக்கு அகதிகளை அனுப்பி வைக்க இரண்டு நாள்கள் தேவைப்படுவதாகவும், செலவு அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

செலவு குறைவாகவும், விரைவாகவும் அகதிகளை [5 ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி-மாங்குளம்

## மின்மாற்றிகளுக்கு ஒயில் கிடைப்பதில் தாமதம்

(மாங்குளம்)

கிளிநொச்சி, மாங்குளம் பகுதிகளில் சேதமடைந்த மின் இணைப்புகள், மின் மாற்றிகள் யாவும் திருத்தப்பட்ட நிலையிலும் அவற்றிற்கு தேவையான ஒயிலைப் பெற முடியாமல் மின்சாரசபை அதிகாரிகள் அதைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

எண்ணெய் அனுப்புவதற்கு தாம் தயாராகஇருப்பதாகவும் உரியவர்களுக்கு சென்றடைவற்கு அரச அதிபர் உத்தரவாதம் அளிக்கவேண்டுமென கொழும்பிலுள்ள மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனராம்.

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள மின் மாற்றிகளுக்கு மாத்திரம் 70 பரல் ஒயில் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அணுவால் அச்சுறுத்த நினைத்தால் வருந்த வேண்டிய நிலை வரும்

## இந்தியா பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

(கல்கத்தா)

அணுஆயுதத்தை பாவித்து இந்தியாவை அச்சுறுத்த பாகிஸ்தான் நினைத்தால் அதன் பல தலைமுறையினரின் வேதனைச்சுமைக்கு அது பொறுப்பு ஏற்கும் வகையில் இந்தியா பதிலடி கொடுக்கும் என இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் சரத்பவார் எச்சரிக்கை செய்துள்ளார்.

கல்கத்தாவில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

காஷ்மீரிலும் பஞ்சாப்பிலும் வன்செயல்களை தூண்டுவதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்பு செலவினத்தில் தொடர்ந்து நெருக்குதலை உண்டாக்க பாகிஸ்தான் முயலுகிறது. இது சிம்லா ஒப்பந்தத்தின் உணர்வை பாகிஸ்தான் மதிக்கவில்லை என்பதை காட்டுகிறது.

பாகிஸ்தான் தலைவர்கள் தெளிவற்ற நிலையில் காணப்படுகின்றனர் ஆனால் எவ்வித விளைவையும் எதிர்நோக்க இந்தியா தயாராக உள்ளது.

இந்த ஆண்டை சமரச (6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் ஓடுவதும் புதிய தந்திரோபாயமாம்

படையினர் ஆறு காவலரண்களிலிருந்து பின்வாங்கியது யுத்த தந்திரோபாயமே என கூட்டுப்படைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது. நேற்றுக் காலை வெளியிடப்பட்ட இவ் அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

முல்லைத்தீவில் முகாமைச் சுற்றியுள்ள காடுகளிலிருந்து சிறுபீரங்கி முதல் நவீன ஆயுதங்கள் கொண்டு விடுதலைப் புலிகள் தாக்குதலைத் (5ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. கே. எல். எப். எல்லையைத் தாண்ட

## அனுமதிக்க வேண்டாம் பாக். பல நாடுகள் கோரிக்கை

(டில்லி)

பாகிஸ்தானிலிருந்து எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைக் கடக்க தீவிரவாதிகள் எடுக்கும் முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டாமெனப் பல நாடுகள் பாகிஸ்தானைக் கோரியுள்ளன. ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் உட்பட சார்க் அமைப்பு ஏசியான் அமைப்பு என்பனவும் இக் கோரிக்கையை பாகிஸ்தானிடம் விடுத்துள்ளன.

## பாகிஸ்தான் அணுகுண்டை விற்பனை செய்யாது

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் அணுகுண்டுகளைத் தயாரித்து பிறிதொரு முஸ்லிம் நாட்டிற்கு வழங்கும் எண்ணம் எதுவுமில்லையென பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அணு குண்டொன்றைத் தயாரிக்கக் கூடிய பாகங்களையும், தொழில் நுட்பங்களையும் ஏற்கனவே பெற்று விட்டதாக அவர் தெரிவித்தார். இந்த அணுகுண்டு விவகாரம் தொடர்பாக அமெரிக்கா 1990-ம் ஆண்டில் பாகிஸ்தானுக்கான உதவியை குறைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப் புலிகளுக்கு தொண்டமான் கடிதம்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு கட்சிகளினதும் ஆதரவு கிடைக்கக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்கிக் கொண்டு தாம் யாழ்ப்பாணம் வந்து பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாக தெரிவித்து அமைச்சர் தொண்டமான் விடுதலைப்புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசாவுக்கு அவர் அனுப்பி வைத்த கடிதம் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக புலிகளிடம் கையளிக்கப்பட்டது.

இக் கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது:

தைப்பொங்கல் கழிந்ததும் நான் யாழ்ப்பாணம் வருவ [5 ஆம் பக்கம் பார்க்க]

## தாண்டிக்குளம் வரையில் புகையிரத சேவை

கொழும்பிலிருந்து வவுனியா வரைக்குமான ரயில்சேவையை தாண்டிக்குளம் வரை நீடிப்பது பற்றி கொழும்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு கூட்டுப்படைகளின் அனுமதியும் கிடைத்துள்ளதாம்.

## யாழ். மாவட்ட மாணவரை பிரேமா. சந்திக்க விருப்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 1990 ஆம் ஆண்டிற்கான கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்று சித்தியெதிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி ஆவலாய் உள்ளார்.

பருத்தித்துறைஹாட்லிக்கல்லூரியைச் சேர்ந்த அன்பழகன் (5 ஆம் பக்கம் பார்க்க)



தோற்றம் : 1911 - 8 - 1

மாற்றம் : 1992 - 2 - 6

அமரர்

# திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்

## அவர்கள் மறைவு குறித்து

## வேதனை விதும்பல்

உன்னிடமிருந்து
எழுத்துரு கண்டு
எழுந்து வந்த
புத்தகங்கள் எத்தனை
விருஷ்ஷங்கள்
இன்றும்
இந்த மண்ணில்
துளிர்க்கவென பல
நூல் விதைகள்
ஆசான்கள் கைபார்த்திருக்க
நீ
கண்ணை மூடிக்
கொண்டாய்!
மறுபிறப்பென
ஒன்றிருந்தால்
மீண்டும் வா
காத்திருக்கின்றோம்!

ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்
பூபாலசிங்கம் புத்தகசாலை
மக்மிலன் புத்தகசாலை
ஸ்ரீலங்கா புத்தகசாலை
எஸ். கே. சாமி நெல்லியடி
திருமகள் புத்தகசாலை நெல்லியடி

சிவம் மெடிக்கல் சாவகச்சேரி
திருக்கனிதம் சாவகச்சேரி
கலைச்சோலை வல்வெட்டித்துறை
துர்க்கா ஸ்ரேஷனர்ஸ் சுன்னாகம்
சோபிதா புத்தகசாலை
ம. சி. சந்திரபோஸ்

(5915)

## "எதற்கும் தயாரான நிலையில் யாழ். மக்கள்"

# உணவும், மருந்தும் கையிருப்பில் இல்லை

# ஆனால் கட்டுப்பாடும் வீரமும் குறையவில்லை

கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ்ப்பாணத்துக்குப் போவது என்ற நினைப்பு மனதில் ஏற்படுவது என்றாலே அது ஒரு பெரிய கரைச்சல், இடர்ப்பாடுகளை எதிர்நோக்கிய அனுபவமாகவே இருந்து வந்திருப்பது தெரியும் பொது மக்களுக்கும் மற்றவர்களுக்கும் சரி, தற்போதையபாதை வழித்தடைச் சிக்கலும் அபாயமும் நிறைந்தது. இருந்தாலும், தட வழிப்பாதையில், டிராக்டரும், கடலில் வள்ளமும்,படகும் இல்லா விட்டால் பயணம் செய்ய முடியாத நிலைமை. பிற்பாடு சாலை மார்க்கமாகப் பேருந்து எப்படியும் கிளிதொச்சியிலிருந்து புறப்பட்டாலும் எட்டு மணி நேரத்துக்குப் பிறகு யாழ்ப்பாண யாத்திரை என்பதாகதமது முகவர் கிறிஸ் தோபர் மொறிஸ் அனுபவ ரீதியாகக் குறிப்பிட்டிருக்கிறார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

### போர்ச் சூழலுக்கு பழகிய மக்கள்

யாழ்ப்பாண வடபுல ஈழத் தமிழ் மக்கள் இந்தப் போர்ச் சூழலுக்குப் பழக்கப்பட்டு பழகிவிட்ட ஒரு நிலையில், இனித் தலைக்கு மேல் போய் விட்டது சாண்போனாலென்ன முழம் போனாலென்ன என்ற தைரியத்தின் விளைவு எதற்கும் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதையும் கிறிஸ் தோபர்மொறிஸ் நேரில்பார்த்ததைக் குறிப்பிட்டிருக்கிறார்.

சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் எந்த நேரமும் வரலாம், குண்டுகள் எந்த நேரமும் விழலாம் என்பதை மக்கள் புரிந்து கொண்டே மனதைத் திடப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இருப்பதை வைத்துச் சமாளிக்க முன்வந்துள்ள, உருப்பெற்றுள்ள ஒரு நிலையில், தாக்குதல் என்று வந்தால் சமாளிக்க,எதிர்த்தடிக்க புலிப்படைப் போராளிகள் முகாம்களையும், பதுங்கு குழிகளையும் அமைக்கும் பணியில் முனைப்புடன் இப்போது ஈடுபட்டு வருகிறார்கள் என்பதையும் கிறிஸ்தோபர் மொறிஸ் தெரிவித்துள்ளார்.

வடபுல யாழ்ப்பாணத்தில் விலைவாசிகள் இப்போது ஏறிவிட்டன. பெற்றோல் ஒரு லீற்றருக்கு 2000 ரூபா என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். உணவுக் கையிருப்புக்கள், மருந்துப் பொருள் இருப்புக்கள் அங்கே குறைந்து விட்டன. ஆனால் கட்டுப்பாடும், வீரமும் அங்கே குறையவில்லை என்று முகவர் சுட்டிக்காட்டியுள்ளார்,



### யாழ்ப்பாணம் ஒரு தேசம்

யாழ்ப்பாணத்து மருத்துவ அதிகாரி டாக்டர் ராஜேந்திரன் அவர்கள், இன்றைய அல்லாடும் ஒரு நெருக்கடி நிலையில்யாழ்ப்பாணப்பொது மக்களை எதிர்நோக்கியிருக்கும் மருத்துவப் பிரச்சினைகள் ஏராளம். மனிதாபிமான நோக்கத்தோடு கண்காணிக்க வேண்டிய ஒரு பிரச்சினை, சாதாரண நோயே உயிரைக் குடிக்கும் அளவுக்கு மாறக் கூடிய ஒரு அபாயம் நிலவுகின்றது என்றால் அங்குள்ள நிலைமையை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள்.

தாயகத்திலேயே அகதி முகாம்கள். பல்லாயிரக்கணக்கான குழந்தைகள், சின்னஞ் சிறுவர்கள் போதிய உணவும் ஊட்டச் சத்தும் இன்மையால் எலும்பும் தோலுமாகக் காட்சி தருகிறார்கள் என்பதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தாய்மார்களின் கதியோ நினைத்தாலே நெஞ்சு நடுங்கும். எதிர்கால ஈழ நம்பிக்கை என்ற ஒன்று மட்டும் கண்களில் விளங்க, அனுபவிக்கும் துயரங்களால் சோகை தட்டிப்போன நிலையில் காணப்படுகின்றார்கள். ஒரு கால வெற்றிவாகையை எதிர் நோக்கிய சோகை என்றால் கூட மிகையில்லை. என்றாலும் டாக்டர் ராஜேந்திரன் என்ற அந்த மருத்துவ அதிகாரி, கூற்றுப்படி வடபுல யாழ்ப்பாணம் ஒரு தேசம், ஒரு நாடு அதில் வசிக்கும் தாய்மார்கள், குழந்தைகள், வருங்காலப் பிரஜைகள் இப்படித் தேய்ந்து தேய்ந்து இற்றுக்கொண்டிருப்பதை எதிர் காலத்தில் ஈழ வடிவத்தின் ஆழமான வடுக்களாக அமைந்து விடுமே என்ற ஒரு அச்சத்தைப் புலப்படுத்துகிறது என்றும்தெரிவித்ததாக கிறிஸ் தோபர் மொறிஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

### வீதியில் இறங்கி மக்கள் ஆர்ப்பாட்டம்

சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடையை எதிர்த்து ஈழ மக்கள் ஒருநாள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். யாழ்ப்பாணத்தின் மீது சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் என்ற மிரட்டலையும் எதிர்த்து மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் யாழ்ப்பாணத்தில் நடந்தஆர்ப்பாட்டப் பேரணியைக் கண்ணுற்ற பி.பி ஸி முகவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இந்த வெகுஜனப் போராட்டத்தின் போது, எல்லாக் கடைகண்ணிகளும், வங்கி நிலையங்களும், காரியாலயங்களும் மூடி பல்லாயிரக்கணக்கான ஈழமக்கள் வீதிக்கு வந்து இந்தப் பேரணியின் மூலம் சிறிலங்கா அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மைக்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

இந்த ஆர்ப்பாட்டப்பேரணி தமிழ் ஈழமக்களின் கூட்டமைப்புகளின் ஒருங்கிணை ஆயத்தார்களால் ஒழுங்கு செய்யப்பட்டது. அவர்கள் தங்கள் உள்ளக் கிடக்கையை கோரிக்கைகளாக எழுதி யாழ்ப்பாணத்திலுள்ள சிறிலங்கா அரசின் முகவரிடம் (அரசாங்க அதிபர்) அரசுத் தலைவர் மாண்புமிகு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவிடம் சமர்ப்பிக்குமாறு கொடுத்திருக்கிறார்கள்.

இந்தப் பேரணியில் புலிப் படைகள் எவரும், புலிப்படை என்று சீருடை அணிந்து தோற்றம் தரும் போராளிகள் எவரும் தென்படவில்லை என்பதையும் கிறிஸ்தோபர் மொறிஸ் ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

### மக்கள் புலிகளைப் பிரிப்பது கஷ்டம்

மக்களில் புலிகளை பிரிப்பது என்பது கஷ்டமான காரியம் தான் இது போரிடும் தலைமையின் உணர்வலை அன்று பொசுங்கும் மக்கள் தரப்பின் உணர்வலைஎனநாம் எடுத்துக் கொள்ளலாம் என்று பல முகவர்கள்சுட்டிக்காட்டியுள்ளார்கள். என்றாலும் அரசு கைவிட்ட நிலையில், புலிப்படையினர் யாழ்ப்பாணத்தைக் காத்து வரும் ஒரு நிலையில் புலிப்படையினரின் நீல நிறச் சீருடை அணிந்த புதிய காவல் படையினர் புலி இலட்சினையுடன் நிற்பதுமன்றி கூட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவற்றைக் கட்டிக்காக்கும் நோக்குடன் காவல்உலாவந்து கொண்டிருப்பதாக கிறிஸ் தோப்பர் மொறிஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப்பொதுமக்கள் கொடுத்திருக்கும் இம் மனுவில் "இலங்கையரசின் மேலிடத்தேரே, புலிப்படைக்கு எதிராக என்று நீங்கள் எடுக்கும் இந்தப் பொருளாதார முற்றுகையால் பொது மக்களாகிய நாமும் பாதிக்கப் படுகின்றோம் இதனை அரசியல் தலைமைப்பீடம் உணர வேண்டும்" என்ற அறநெறிக் கோரிக்கை ஒன்றையும் எழுப்பியுள்ளார்கள். அதாவது சில ஆயிரம் புலிப்படைப் போராளிகளைத் தண்டிக்கும் நடவடிக்கையால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் பாதிக்கப்படுவது எவ்வகையில் நியாயமாகும் என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். உண்மையில்விடுதலைப் புலிகளுக்குஎதிரான எதிர்ப்பு, காழ்ப்பு எதுவும் அறவே கிடையாது எனவும் கிறிஸ்தோபர் மொறிஸ் கூறியுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

> அண்மையில் வடபுலக்கிற்கு விஜயம் செய்த பி பி ஸியின் கொழும்பு முகவரான கிறிஸ்தோபர் மொறிஸ் தனது விஜயம் பற்றி வெளியிட்ட நேரடி வர்ணனையின் தொகுப்பு இது இப் பகுதியில் தான் கண்ட- கேட்ட -சேகரித்த தகவல்களிலிருந்து பெற்ற அனுபவத்தை பி பி ஸிக்கு அவர் வழங்கினார். இது நேற்று முன்தின மிரவு பி பி ஸியின் உலகசேவையிலிருந்து முழங்கும்''தமிழோசை'' நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகியது

# பத்து வருடத்துக்கு மேலாகப் போராடுகிறோம்; மக்கள் எம்முடன் இல்லாவிடில் எப்படி சாத்தியமா?

கேள்வி;

கடந்த ஒன்றரை வருட காலமாக நடந்து வரும் போரினால் பல சொத்து இழப்புகளுக்கும், இன்னல்களுக்கும் மக்கள் ஆளாகி வருகின்றனர். மக்களைப் பொறுத்தவரையில் நிலைமை இப்போது எவ்வளவு மோசமாக இருக்கிறது?

பதில்;

யாழ்ப்பாணத்தை இராணுவம் முற்றுகையிட்டுள்ளது. எந்த நேரமும் இராணுவம் இங்கொரு தாக்குதல் நடத்தக் கூடும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். பெருமளவு மக்கள் அகதிகளாகி உள்ளனர். சுமார் மூன்று லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு உரிய வசதிகள் கூட சரியான முறையில் செய்து கொடுக்கப்படவில்லை. இராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டால் பெருமளவு மக்கள் கொல்லப்படுவார்கள். போதுமான வைத்திய வசதிகள் கூட இங்கில்லை. பெருமளவு மக்கள் அகதியாக மாறுவார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரை நாம் எந்த நேரமும் பேசத் தயாராக இருக்கிறோம்- சமாதானத்தின் கதவுகளைத்திறந்து வைத்திருக்கிறோம் என்று சொன்ன போதிலும் கூட அதற்குச் செவி சாய்க்காமல் இராணுவத் தீர்வையே நாடி நிற்கின்றமை தெளிவாகத் தெரிகின்றது. அதாவது யாழ்ப்பாணத்தின் மீது ஒரு தாக்குதல் நடத்தப்படலாம் என்ற எதிர்பார்பபோடு மக்கள் வாழ்கின்றார்கள்.

> விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நயகம் யோகரத்தினம் யோகி அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பி பி ஸியின் கொழும்பு முகவர் கிறிஸ்தோபர் மொறிஸுக்கு வழங்கிய செவ்வி இது இச் செவ்வி நேற்று முனதினமிரவுபி பி ஸியின் உலக சேவையிலிருந்து முழங்கும் தமிழோசை நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகியது.

கேள்வி:

மக்கள் படும் இன்னல்களுக்கு இப்போது நீங்கள் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகிறீர்கள். புலிப்படையினரும் இதற்குப் பொறுப்பல்லவா? இருதரப்பினரும் சேர்ந்தால்தானே சமாதானத்திற்கு வரமுடியும்? இருதரப்பினரும் சமாதானத்திலோ, தீர்விலோ உண்மையான அக்கறை கொண்டுள்ளதாகத் தெரியவில்லையே?

பதில்:

எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் எங்களுடைய மக்களின் உரிமைகாக



பாதுகாப்பிற்காக போராடிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் பேச்சு வார்த்தைகளை நடத்தினோம். பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தமையால்தான் நாங்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டி ஏற்பட்டது இன்றைக்கும்கூட இந்த மக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். அவர்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம் நாங்கள் போராட்டத்தை விரும்பி நடத்தவில்லை சமாதானத்திற்கு ஆயத்தமாக இருக்கிறோம் என்று சொன்ன போதும் அரச சமாதானத்திற்கான கதவை மூடி வைத்து விட்டு போராட்டத்தைத் தொடர்கின்றது. எனவே இந்தக் கேள்வியைப் பொறுத்தவரை எங்கள் மீது எந்தப் பங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பத்து வருட...

**கேள்வி:**

அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் வரக்கூடும் என்ற நபிக்கை ஒரு மாதத்திற்கு முன்பு இருந்தது. இந்தப் பயணம் நடக்கக்கூடும் என்று இப்போது தெரியவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைகள்பற்றிஉங்கள்கருததென்ன?

**பதில்:**

அமைச்சர் இங்கு வருவார் என்றும். எங்கள் பிரச்சினைகள் பற்றி நாங்கள் பேசலாம் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால் சிங்கள இனவாதம் தொண்டமானின் வருகையை தடுத்துவிட்டது. தொண்டமானின் தீர்வுத் திட்டத்தில் சில நல்ல அம்சங்கள் உண்டு. அவர் எமது தாயகத்தை ஏற்றுக் கொண்டிருப்பவர் தாயகத்தின் நிலவுரிமைகள் தாயகத்தின் நிர்வாகத்திற்கே உரியது இது போன்ற சில முற்போக்கான அம்சங்கள் உண்டு எனவேதான் தொண்டமானிடம் சொன்னோம் வாருங்கள் பேசலாமென்று. பேசிப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்றும் சொன்னோம். ஆனால் சிங்கள இனவாதம் தொண்டமானின் வருகையைத் தடுத்துவிட்டது. எனவே பேச்சுவார்த்தைக்கான காலம் முடிவடைந்து விடடது என்றுதான் தோன்றுகிறது.

**கேள்வி:**

அரசின் அடக்குமுறைபற்றி நீங்கள் பேசுகிறீர்கள். ஆனால் நீங்களே மனித உரிமைகளை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச அமைய ஸ்தாபனமும் ஏனைய தமிழ்க் குழுக்களும் குற்றம் சாட்டுகின்றனவே. தமிழ் மக்கள் சார்பில் பேச உங்களுக்கு என்ன உரிமையுண்டு?

**பதில்:**

தமிழ் மக்களைப் பொறுத்தவரை புலிகள் தமிழ் மக்களுடைய பாதுகாப்பிற்காகப் போராடி வருகின்ற இயக்கம். தொடர்ந்து பத்தாண்டுகளுக்கும் மேலாகப் போராடி வருகின்ற இயக்கம் இது. சிங்களப்படையோடு போராடி இருக்கின்றோம். இந்தியப் படையோடு போராடி இருக்கின்றோம் இந்தப் போராட்டத்தில் நாங்கள் இந்தியப் படையோடு வெற்றியும் சாதித்து உள்ளோம். சிங்களப் படையினரோடு போராடுவதில் கணிசமான அளவில் முன்னேற்றம் கண்டுள்ளோம். இவை, மக்களின் ஆதரவில்லாமல் செய்ய முடியாது. ஒட்டு மொத்தமாகத் தமிழ் மக்களுடைய ஆதரவு இல்லாமல் மிகப் பெரிய இந்தியப் படைக்கு எதிராக - சிங்களப் படைக்கு எதிராக - கூலிப் படைகளுக்கு எதிராகநாங்கள் போராட்டத்தை நடத்தியிருக்க முடியாது நாங்கள் பெரியளவில் பிழைவிடுகிறோம் என்றால் மக்கள் எங்களை ஆதரிக்கப் போவதில்லை, எங்களுடைய வெற்றிகள் தொடர்ந்து நாங்கள் நடத்தும் போராட்டங்கள் மக்கள் ஆதரவைக் காட்டும். மிகப் பெரிய கட்டுப்பாடுகளோடு நடக்கும் நாங்கள் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால் நாங்கள் சரியானதொரு நோக்கத்தோடு சரியானதொரு பாதையிலே போய் மக்களோடு தான் நாங்கள் வாழ்கின்றோம் அந்த அடிப்படையில் தான் எமக்கு மக்கள் ஆதரவு இருக்கின்றது. என்று சொல்கிறோம். இன்னுமொரு விடயத்தையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். இந்திய அரசாங்கம் எங்கள் மீது நடவடிக்கை எடுத்தது. சிறிலங்கா அரசாங்கம் எங்கள் மீது நடவடிக்கை எடுத்தது. ஆனால் புலிகளோடு பேசித்தான் இந்தப்பிரச்சினைகளை தீர்க்கலாம் என்றுதான்நாட்டு மக்கள் கருத்து வெளியிட்டார்கள். இது எதைக் காட்டுகிறது என்றால் புலிகள் தான் மக்கள் பிரதிநிதிகள் என்பதையேயாகும்.

**கேள்வி:**

இந்தியாவுடனான உறவை எடுத்துக் கொண்டால் தலைவர் பிரபாகரனையும், பொட்டு அம்மானையும் ராஜீவ்காந்தி கொலைதொடர்பாக இந்திய நீதிமன்றமொன்றில் ஆஜராகும் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இது உங்களுக்கு வியப்பைத் தந்து இருக்கிறதா? அல்லது நீங்கள் எதிர்பார்த்தீர்களா?

**பதில்:**

நாங்கள்இப்படியானதொரு நிலையையிட்டு ஆச்சரியப்படவில்லை - எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தோம். நாங்களும் இந்தியாவை குற்றவாளியாக்கக் கூடிய வகையில் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு உத்தேசித்துள்ளோம். இந்தியப்படை இங்கு வந்தபோது 8000-க்கு மேற்பட்ட பொது மக்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டுள்ளார்கள். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன இவர்களுடைய நோக்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மாசு படுத்துவதும், பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை போடுவதும் தான். இப்போது என்ன நடக்கிறது என்றால் மேற்கு நாடுகள் குறிப்பாக கனடா, அவுஸ்திரேலியா, ஸ்கன்டிநேவிய நாடுகள் இப் பிரச்சினையைப் பேசித் தீர்க்க வேண்டுமென்பதில் தலையிட விரும்புகின்றன. அதை இந்தியாவிரும்பவில்லை இந்தியா வந்து இலங்கை மீது வேண்டுமென்றே கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக இலங்கைப் பிரச்சினைதனதுகையை மீறிப்போய் விடாமல் இருக்க வேண்டுமென விரும்புகின்றது. அந்த வகையில் எங்களுடைய இயக்கத்தை மாசு படுத்துவதன் மூலம் ஒரு பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டைபோட இந்தியா முயற்சிக்கின்றது

**கேள்வி;**

இந்தியாவின் அளவு, அதன் நிலை இவற்றின் காரணமாக இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு ஒன்று ஏற்படுவதாக இருந்தால் அதில் இந்தியா தலையிட வேண்டுமல்லவா?

**பதில்,**

இந்தியா இப்பிரச்சினையில் நீண்ட காலமாகத் தலையிட்டு உள்ளது. பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறது. ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருக்கிறது. இராணுவ ரீதியாக மிகப்பெரும் அழிவுகளைச் செய்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை இந்தியா ஒன்றை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். அவர்களுடைய முயற்சி மிகப்பெரும் தோல்விகளும் எமக்குப் பாரிய அழிவுகளும் ஏற்படுத்தியுள்ளது என்பதை எனவே இன்று இருக்கின்ற சூழ்நிலையில் வேறு யாராவது இதில் முயற்சி எடுக்கின்றபோது அது நல்ல முயற்சியாக இருக்கின்றபோது அதற்கு ஒத்துழைப்புக் கொடுப்பது தான் இந்தியா செய்ய வேண்டியது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யாரும் முன்வரலாம். அதே நேரத்தில் இலங்கை அரசாங்கம் இந்தப் பிரச்சினையை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்ல விரும்பவில்லை. கொண்டு போனால் தங்களுக்கு அதன் மூலம் பாதிப்பு ஏற்படலாம் என்று நம்புகிறார்கள். எங்களைப பொறுத்த வரையில் இந்தியா பெரிய அளவில் முயற்சி செய்து மிகப்பெரும் தோல்வியும், மிகப்பெரும் அழிவும் தான் கிடைத்தது. எனவே இந்தியா இதிலிருந்து ஒதுங்கிக் கொண்டு மற்றவர்களுக்கு வழி விடுவதே சாலச் சிறந்தது,

## உணவும்...

## போருக்கும் தயார் பேசவும் தயார்

புலிப்படை எதிர்ப்பு போராட்டத்தில் மைய அரசு தன் குடிமக்களில்ஒருசாராரை கஷ்டப் படுத்துவது - கொடுமைப்படுத்துவது என்ன நியாயம் - என்ன தர்மம்? என்ற கேள்வியே இப்போது தொக்கி நிற்கிறது.

இதேவேளை ''இலங்கை அரசு பேசுவதற்கு விரும்பினால் நாங்களும் பேச்சுவார்த்தை அரங்கிற்கு வர ஆயத்தமாகவுள்ளோம். பேசலாம் பேசுவோம்'' என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிக்கின்றார். அவர் மேலும் கூறுகையில் ''ஆனால் அரசு போரிட்டு முடிவுகான விரும்பினால் நாங்களும் சற்றும் இளைக்காமல் போரிட்டு தீர்த்துக் கொள்வோம். எனினும் யாழ்ப்பாணத்தின் மீது அரச இராணுவம் அத்துமீறித் தாக்குதல் நடத்தினால் அத்துடன் இந்தச் சமாதானக் கதவு மூடப்படும் சமாதானப் பேச்சு என்ற இலட்சியமும் அறவே அற்று அழிந்து விடும். நிரந்தரமாக பேச்சுவார்த்தைக்கான கபாடம் மூடப்பட்டால் அப்புறம் அரசு வருத்தப்படுவதில் பயனேதும் ஏற்படபோவதில்லை'' என்பதையும் தெளிவு படுத்தினார்.

புயலுக்குப் பிந்திய அமைதி ஏற்படுவதுபோல புயலுக்கு முன்னும் அமைதியான ஒரு நிலை - நீர்ச் சலனமான ஒரு நிலை ஏற்படுவது இயல்பு. அந்த அமைதியைத் தான் யாழ்ப்பாணத்தில் நானும் கண்டேன் என்று கூறி தனது யாழ்ப்பாண விஜயம் பற்றிய வர்ணனையை முடித்தார் கிறிஸ்தோபர் மொரிஸ்.

---

### புத்தக அச்சக வித்தகர்

### அமரர்

# ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்கள்


### ( உரிமையாளர் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை )

### மறைவுக்கு

# எமது கண்ணீர் அஞ்சலி

விண்ணிலும் மண்ணிலும்
ஐம்பூதங்கள் அமைந்திருந்தாலும்
அந்த அமைவு ஒரு வீதாசாரத்தில்
அமையும்போது தான் மனிதன்
மனிதனாக மதிக்கப் பெறுவன்.
இயற்கை அன்னை இவன் ஒரு மனிதன் என்று
இவனையே சுட்டிக்காட்டுவாள்.

- ஷேக்ஸ்பியர்



மண்ணகத்து மாந்தர் மடிவார் மறப்பதில்லை
விண்ணகத்து வாழும் விசும்பு நிலை இவர்க்குண்டு
கண்ணகத்து நீங்காக் கல்வி நிலை சாதித்தோன்
எண்ணரிய தருமம் ஏழைகட்கு இயற்றியவன்
புண்ணியத்தைப் பாங்காய்ப் புகன்றுள்ளம் சாதித்தோன்
எண்ணியதெல்லாம் ஈடேற வைத்திட்டோன்
எங்கேதான் போனான், எமையெல்லாம் சோதித்தான்?

பாசுபதம் பெற்ற பரிசிவனுக்கில்லை யென்றால்
மாசு இல்லாத மனப்பாங்குடையான் என்றெவரும்
பேசுகின்ற கீர்த்திப் பெருவள்ளல் சுப்பிரமணியம்
ஈசனடி நொடியில் சேர்ந்திட்ட! இவ்வேளை
பேசுமிளங்குயில்காள், பெட்பார்ந்த மென்கிளிகாள்
ஏதவன் பேர், ஏதவனூர் என்றா நீர் ஏங்குகிறீர்..?
மாசில் தவத்தானை, மாபெரிய உளத்தானை
காசில் குணத்தானைக் காண்பதற்கு நாம் வருவோம்!

அமரர் ஆ. சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியுறுக!

**சிங்கம் இன்டஸ்றீஸ்**

**கந்தையா விற்பனை நிலையம்** (சி/3913)

### சிந்தனைக்கு

தற்செயல் என்பது நமக்கு மற்றும் ஓர் எசமானன்.

— ப்ளினி (மூத்தவர்)

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 12-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# விபரீதமாகும் விபத்துகள்

அண்மைக் காலத்தில் யாழ். குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இதனால் பலர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். மூன்று தினங்களுக்கு முன் நடந்த ஒரு வீதி விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கோஷ்டி மோதல்கள் உருவாகும் அளவிற்கு நிலைமை சென்றது.

தமிழர் பிர தேசங்களில் பொருளாதாரத் தடை விதிக்கப்பட முன்னர் யாழ்ப்பாணக் குடா நாட்டில் வாகன நெரிசல்களோ அதிகம். நெருக்கடியான வீதிகளில் பயணம் செய்வதோ மிகவும் சிரமம் மிக்க தொன்றாக இருந்தது. ஆனால், அன்று நடந்தவற்றை விட இன்று நடக்கும் வாகன விபத்துக்களோ அதிகம். ஆனால் ஓடும் வாகனங்களோ மிகவும் குறைவு.

அவ்வாறான இவ்வாகன விபத்திற்குக் காரணம் என்ன? யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் வாகன விபத்துக்கள் குறித்து தமிழீழ காவல்துறையினர் பல அறிவிப்புக்களை வெளியிட்டுள்ளனர். இதில் விபத்திற்கான காரணங்கள் குறித்தும் அவற்றை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது குறித்தும் பத்திரிகைகளிலும், வானொலிகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு, காவற்துறையினரைப் பயன்படுத்தி வீதி ஒழுங்கு பேணும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு உள்ளனர். ஆனால் வீதி விபத்துக்கள் சில தவிர்க்கப்பட்டிருப்பினும், அவற்றில் பெரும் வீழ்ச்சிப் போக்கு ஏற்பட்டதாக இல்லை.

பஸ் போக்குவரத்து அற்ற நிலையில் வீதிகளில் சைக்கிள் போக்குவரத்து அதிகரித்திருப்பது தவிர்க்கப்பட முடியாததுதான். இது சைக்கிள் போக்குவரத்தில் புதிதாகப் பழகிய ஆண், பெண் இருபாலாரும் ஈடுபடுத்தப்படுவதும் தவிர்க்க முடியாத்துதான். ஆனால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கும், பலர் காயமடைவதற்கும், மரணமாவதற்கும் காரணம் இவையல்ல. பயணிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகளே காரணமாகும்.

பயணிகள் அனைவரும் வீதி ஒழுங்குமுறை தொடர்பாக அறிவிக்கப்படும் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பார்களேயானால், விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். வீதி ஒழுங்கு விதிகள் உருவாக்கப்படுவதும், அவற்றைப் பேணுமாறு வற்புறுத்தப்படுவதும் வீதிகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கல்ல. அதில் பயணம் செய்வோருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகவே என்பதை முதலில் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு, வீதி ஒழுங்கு முறையை ஒருவர் மீறும்போது தான் மட்டுமல்ல மற்றவரையும் விபத்துக்குள்ளாக்குவதற்கோ, அல்லது மரணமடைவதற்கோ காரணமாக இருந்தார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது வீதியில் செல்பவர்கள் தங்களையும் பாதுகாப்பதோடு மற்றவர்களையும் பாதுகாக்க வேண்டும். அதற்குப் பொறுப்புணர்வு அவசியம் தேவை.

## தோட்டத் தொழிலாளருக்கு
# 100 ரூபா சம்பள உயர்வு உடன் வழங்கவேண்டும்

கடந்த வரவுசெலவுத் திட்டத்தின்மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நூறு ரூபா சம்பள உயர்வு இந்த வாரத்திற்கு முன்பாக தோட்டத்தொழிலாளர்களுக்கும் வழங்கப்படல் வேண்டும் என்று கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சர் ரூபா கருணாதிலக்கவிடம் தோட்டத்தொழிலாளர்களுக்கு இச் சம்பள உயர்வு வழங்கப்படாததைச் சுட்டிக்காட்டியுள்ள திரு. செல்லச்சாமி உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கருங்கடல் படை விவகாரம்; தகராறு இன்னும் தீரவில்லை

(கீவ்)

கருங்கடல் படையைச் சேர்ந்த கடற்படை விமானப் படை ஆகியவற்றின் முதலாவது குழு உக்ரைனுக்கு விசுவாசப் பிரமாணம் செய்ய விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதித் தளங்களான நிகலாயேவ், ஒசாகோவ் ஆகியவற்றைச் சேர்ந்த கடல் விமானப்படை வீரர்களே முதலில் விசுவாசப் பிரமாணம் எடுக்கவுள்ளதாக உக்ரைன் டெலிவிஷன் கூறியுள்ளது. ஆனால் இச் செய்தி இன்னும் சரியாக ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

300கப்பல்களையும் 70,000 வீரர்களையும் கொண்ட கருங்கடல் படை சம்பந்தமாக ரஷ்யாவும் உக்ரைனும் பிரச்சினையில் ஈடுபட்டுள்ளன.

இந்தப் படை காமன்வெல்த்தின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டுமென ரஷ்யாவும், இதிலுள்ள அணுசக்தி பிரிவைத் தவிர இதர பிரிவுகள் அனைத்தும் தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என உக்ரைனும் விரும்புகின்றன,

எனவே வீரர்கள் உக்ரைனுக்கு விசுவாசப் பிரமாணம் செய்வது ரஷ்யாவுக்குக் கோபத்தை ஏற்படுத்துவதுடன் இரு நாட்டு உறவுகளிலும் சிக்கலை ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகின்றது.

ஒரு ரஷ்யரான அட்மிரல் கிகோர் கஸாடனோவ் தென்பகுதி தளங்களுக்குச் சென்று அங்குள்ள வீரர்களைச் சந்தித்து உக்ரைனுக்கு விசுவாசப் பிரமாணம் எடுக்கவேண்டாமென கூறப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் உக்ரைன் தனது கடல் எல்லையை பாதுகாக்கும் அளவுக்கு ஓரளவு படை வைத்திருந்தால் போதுமென முன்னாள் சோவியத் தளபதி அட்மிரல் செர்னாவின் தெரிவித்துள்ளமைக்கு ரஷ்யா ஏகாதிபத்திய நோக்கம் கொண்டு தன்னை ஒருகாலணியாக அது கருதுகிறது என உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

மகா கதரீன்சக்கரவர்த்தினி 18-ஆம் நூற்றாண்டில் கருங்கடல் படையை ஸ்தாபித்தார் என்பதனால் இருநாடுகளுக்கும் அது ஒருதேசிய சின்னமாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும்வெள்ளிக்கிழமை காமன் வெல்த் தலைவர்கள் பெலாரஸ் தலைநகர் மின்ஸ்க்கில் கூடி இதுபற்றி ஆலோசிக்கவுள்ளனர் இதன் பின்னரே உக்ரைன் ஜனாதிபதியுடன் திரு பொரிஸ் யெல்சின் உச்சிமாநாடொன்றை நடாத்த யோசனை கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்காவிலிருந்து
# வாரம் 1500 அகதிகளை ஹெயிட்டி ஏற்கும்

(ஹெய்டி)

வாரமொன்றுக்கு 1500 அகதிகளை திரும்பப் பெறுவதற்கு ஹெயிட்டி இராணுவ ஆதரவு இடைக்கால அரசாங்கம் இணங்கி இருக்கிறது.

நாடு திரும்பும் படகு அகதிகளுக்கு அமெரிக்க அரசு ஒரு தொகை உதவிப்பணம் வழங்க வேண்டுமென ஹெய்ட்டி அரசாங்கம் கேட்டுள்ளது எனினும் இந்தக் கோரிக்கை குறித்து அமெரிக்கா இதுவரை எதுவும் கூறவில்லை என தம்மை அடையாளம் காட்ட விரும்பாத அமெரிக்க அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு அகதிக்கும் 30 டொலர்கள் முதல் 100 டொலர்கள் வரை வழங்க வேண்டுமென ஹெய்ட்டி அரசு கேட்டிருந்த போதிலும் இந்த உதவியை அரசசார்பற்ற நிறுவனமொன்று வழங்க அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

பணவிவகாரமும் அகதிகள் எத்தனை பேரைத் திருப்பி அனுப்புவதென்ற பிரச்சினையும் கடந்த வாரம் 2 ஆவது கட்டத் தொகுதியில் 508 அகதிகளை திருப்பி அனுப்புவதில் கடந்த வாரம் தாமதத்தை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

# கொர்பசேவ் மீது அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டு

வெளிநாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுக்காக இரு கோடி டாலர்கள் கொடுத்து தவியமை ஒரு அதிகார துஷ்பிரயோகம் எனக் குறிப்பிடப்பட்டு விசாரணைகள் தொடங்கப்பட்டிருப்பதாக மாஸ்கோவிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டதுடன் செயலாளர் மிகெயில் கொர்ப்பசேவ் உட்பட பலர் மீது அதிகார துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட விருப்பதாக டாஸ் செய்தி தாபனம் கூறியுள்ளது.

### விடுதலை

தற்கு திட்டமிட்டிருந்தேன். அப்படி வருவதற்கு முன்னதாக அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் பெறுவதற்கு முயற்சி எடுக்கின்றேன். அத்தோடு பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் எனது யோசனைகளை ஆராய்கின்றது. இக்கூட்டங்களில் சில முடிவுகள் உருவாகுமென எதிர்பார்க்கின்றேன். எனவே பல தரப்பினரதும் அனுசரணை கிட்டக்கூடியஒரு திட்டத்தை உருவாக்கிக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து பேச்சு வார்த்தையை தொடங்குதல் நன்றெனக்கருதுகிறேன்.

எனது யாழ். வருகைக்கேற்ற சூழ்நிலை உண்டானவுடன் எனது பயணத்தை மேற்கொள்ள உத்தேசித்துள்ளேன் என்பதை அறிவிக்க விரும்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

### யாழ் மாவட்ட

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அற்புதராஜா, யாழ் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்து தேன்மொழி, பிறேமச்செல்வி ஆகிய மாணவர்களையே ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சந்திப்பதற்கு விரும்புகிறார். எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் மேற்படி சந்திப்பை நிகழ்த்துவதற்கு ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்திருக்கிறது. இச் சந்திப்பின் போது ஜனாதிபதியின் பாராட்டுக்களும், பரிசில்களும் இம் மாணவர்களுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது

இம் மாணவர்களை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி கோரும் வானொலிச் செய்தி ஒன்று நேற்று மாலை 5.00 மணியளவில் யாழ். அரசாங்க அதிபருக்கு கிடைத்தது. (க)

### காஷ்மீர்

லுள்ள காஜிடொகோட்டே என்று அழைக்கப்படுகிற சிறிய தோர் ஊரை நேற்றிறவு பேரணி அடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது

இந்த விடுதலைப் பேரணியில் ஏறத்தாழ 5000 முதல் 8000 தொண்டர்களும், மக்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திய எல்லையை அடைய சுமார் இரண்டு அல்லது மூன்று நாள்கள் ஆகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. எப்படியானாலும், உயிரை இழந்தாலும் பேரணி இந்திய ஜம்மு-காஷ்மீர் எல்லையைக் கடக்கும் என்று விடுதலை முன்னணி நேற்றுஅறிவித்தது.

பாகிஸ்தான் இராணுவம் இந்தப் பேரணியை இந்திய எல்லைக்குச் சில கிலோ மீற்றர் தொலைவில் தடுக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

மேலும் பேரணி இந்திய எல்லையை நெருங்க நெருங்க வழி நெடுகிலும் மக்கள் பலர் பேரணியில் கலந்து கொள்ளக் கூடும் என்று அவதானிகள் கருதுகின்றனர். பாகிஸ்தான் ஆஸாத்காஷ்மீரில் தாய்மார்கள் தமது பிள்ளைகளை உச்சிமோர்ந்து பேரணிக்கு அனுப்புவதாக முஸார்பாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

பேரணிஆர்ப்பாட்டஅமைப்பாளர்கள் பேரணிகள் ஒவ்வொன்றாக வந்துசேர்ந்ததும், கூடிபபேசி மேற்கொண்டு எடுக்கப்படும் உத்திகள்பற்றி முடிவெடுக்கலாம் என்றும், இபபோது என்ன முடிவில் இருக்கிறார்கள் என தெரியவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

எல்லை தாண்டுவதற்குமுன்பாக இப்போது உள்ள கடைசிக் கட்ட நகரான சொகோட்டிப் பகுதிக்குச் செல்லத் திட்டமிட்டிருக்கிறார்கள் அங்கிருந்து அவர்கள் எல்லையைத் தாண்ட வேண்டிய வரும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலை முன்னணியினர் இந்திய எல்லைக்குள் நுழைய பேரணியாக வருவதை ஒட்டி இந்தியா பாகிஸ்தான் மீது போர் தொடுக்கும் என்ற வதந்தியும் பரவியுள்ளது

இந்தியா பாகிஸ்தான் மீது போர் தொடுக்கும் அளவுக்குச் செல்ல தென்றும் சொல்லப்படுகிறது இருந்தும் பாகிஸ்தான் அரசு தொடர்ந்து தனது இராணுவத் தலைமையுடன் தொடர்பு கொண்டுள்ளது என்றும் பாகிஸ்தான் எல்லைத்துறை அமைச்சர் கால் அப்பாசி கூறியுள்ளார்.

இந்தியா எந்த அச்சுறுத்தலையும்எதிர் கொள்ளத் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் பி வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

### இராணுவம்

தொடுத்தனர். அப்போது யுத்த தந்திரோபாயமாகவே பாதுகாப்புப் படையினர் அறு முன்னணிக் காவலரண்களிலிருந்து பின்வாங்கினர். பின்னர் மூன்று மணிநேரத்திற்கும் மேலாக கடும் மோதல் இடம் பெற்றது குறிப்பிடப்பட்டது.

### இலங்கை

வெளியேற்ற ஒரே வழி இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு அனுப்பி வைப்பது தான் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு அகதிகளை மூன்று மணிநேரத்தில்அனுப்பி வைகக முடியும் எனவும், ஒருவருக்கு ஐம்பது ரூபா மட்டுமே செலவாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்


### கம்பியூட்டர் கல்வி

Computer Basic புதிய பிரிவு 17-02-92 லண்டன் I.D.P.M அங்கத்துவ விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது. Practicals Generator Current மூலம் பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ். School of Business Administration 16, 3 rd Cross Street, Jaffna. (சி 3912)

### தவறிவிட்டது

வேலணை புளியங்கூடல் சந்தியைச் சேர்ந்த திருமதி பாலசுந்தரம் தனலெட்சுமி அவர்களின் பாஸ்போட்டும், காசுப்பையும் ஒந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 67/19 தர்பலிங்கம் அவனியூ, சீனிவாசகம் வீதி. கொட்டடி. யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(2201)

### ஆங்கில வகுப்பு

பல்கலைச்சழக மாணவர்கள், தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள், சாதாரண தர உயர்தர பரீட்சை எடுத்த மாணவர்கள் சகலருக்கும் தனித்தனி பிரிவுகளாக Grammar. Vocabulary! Spoken English பாட விதானங்கள் ஆரம்பம் 15-2-92 காலை 9 மணி.

(1) பரமேஸ்வரா சந்தி -பல்கலைக்கழக அருகாண்மை.

(2) ஞானபண்டித வைத்தியசாலை, குளப்பிட்டி.

(2202)


பெருந் தோட்டங்களை

# மக்கள் மயம் ஆக்காதீர்; 'தமிழர் ஆட்சி' உருவாகிவிடும்

'சிங்கள ஆராக்சக' கோரிக்கை

(கொழும்பு)

மலையகத்தில பெருந்தோட்டங்களை மக்கள் மயமாக்குவது. 'தமிழர் ஆட்சி' என்று ஏற்படுவதற்கு வழிவகை செய்யலாம் ஆகவே தோட்டங்கள் மக்கள் மயமாக்குவதைத் தவிர்க்குமாறு சிங்கள ஆராக்சக என்ற அமைப்பு அரசைக் கேட்டுள்ளது சிங்கள வம்சபாரம்பரியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதே இந்த அமைப்பின் பிரதான நோக்கமாகும்.

சிங்கள மக்கள் மத்தியில் ஒற்றுமையின்மையையும், குழப்பத்தையும் ஏற்படுத்தக் காரணமாயிருக்கும் தற்போதைய அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி, அதற்குப் பதிலாக மாற்று அரசியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துமாறு இந்த அமைப்பு அரசைக் கோரியுள்ளது.

இப்போதுள்ள நிர்வாக மாவட்டங்கள் குடியேற்ற ஆட்சியாளரின் வசதியைக் கருதி அமைக்கப்பட்டவை என்றும், இன்றுள்ள சூழ்நிலையில் மக்களின் அபிலாசைகளையும், தேவைகளையும் அனுசரித்து விவேகமும், எதார்த்தமுமான அடிப்படையில் புதிய நிர்வாக மாவட்டங்களை ஏற்படுத்துமாறு இந்த அமைப்பு அரசை வலியுறுத்தியுள்ளது.

வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் திட்டத்தையும் இந்த அமைப்பு வன்மையாக எதிர்த்துள்ளது. சிங்களவருக்குச் சொந்தமான இவ்விரு பிரதேசங்களும் சுதந்திரத்துக்குப் பிறகு மீளப் பெறப்பட்டுள்ளதாகவும், வடக்கையும் கிழக்கையும் தமிழரின் பாரம்பரியத் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புப்படை, பொலிஸ் மற்றும் விமான நிலையம், துறைமுகம் போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்று அந்த அமைப்புத் தெரிவிக்கிறது.

பிரிவினைவாத இயக்கத்தை விரைவில் அழித்து மீளவும் சகஜ நிலையை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் இரு சமூகங்களும் சமாதானமாகவும், சௌகரியமாகவும் வாழ வழி ஏற்படும் என்று சிங்கள ஆராக்சக சங்விதான என்ற அந்த அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

## இன்று இறுதிச் சடங்கு



சிறிசுப்பிரமணிய புத்தகசாலை உரிமையாளர் ஆறுமுகம் சுப்பிரமணியம் கடந்த ஆறாம் திகதி காலமானார்.

1937 இல் சிறி சுப்பிரமணியம் புத்தகசாலையை ஆரம்பித்த இவர் படிப்படியாக முன்னேறி சிறி சுப்பிரமணியம் அச்சகம், திருமகள் கடதாசி விற்பனை நிலையம் என்பவற்றை நிறுவினார்.

இவர் தனது அச்சகம்மூலம் மாணவர்களுக்கான பாடநூல், வழிகாட்டி நூல்களை மலிவு விலையில் வெளியிட்டார்.

தனது 81ஆவது வயதில் காலமான இவர் தமது நிறுவனங்களின் ஊழியர்களினதும், வாடிக்கையாளரினதும் நன்மதிப்பை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது மரணச் சடங்குகள் இன்று நடைபெறவுள்ளது.

திருமலையில்

## நிரந்தர சுற்றிவளைப்பு 5 இளைஞர்கள் கொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலையிலுள்ள கிளிவெட்டி, சம்பூர், சீதனவெளி ஆகிய கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள் அனைவரும் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு முகமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் கடந்த 21ஆம் திகதி முதல் இந்தக் கிராமங்கள் நிரந்தரமாக சுற்றிவளைப்பிற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.

கடந்த ஓரிருநாட்களுக்கு முன்னர்தான் இந்த இராணுவச் சுற்றிவளைப்பு சிறிதளவு தளர்த்தப்பட்டது. இந்த சுற்றிவளைப்பின் போது அங்கிருந்த இளைஞர்கள் எல்லோரும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர் ஐந்து இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த இடங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## தாண்டிக்குளத்தில் 4நாளில் 15 இளைஞர்கைது

தாண்டிக்குளம் தடைமுகாமில் வைத்து கடந்த நான்கு தினங்களில் மட்டும் 15 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு முகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்டனர். கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் ஆறு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் பெண்களும் இராணுவத்தினரால் துன்புறுத்தப்படுகின்றனர்.

மேலும் வவுனியா நகரக் கடைகளில் வேலை செய்யும் இளைஞர்களும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு முகாம்களுக்குக் கொண்டுசெல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேல் மாகாணத்தில்

## நிரந்தரமாய் வசிக்காதோர் பதிவு செய்ய உத்தரவு

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்காதவர்களின் அடையாளங்களைப் பதிவு செய்துகொள்வது என்று சிறிலங்கா அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. சட்ட ஒழுங்குநிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அரசாங்கம் அமைத்துள்ள அகதி முகாம்களைத் தவிர வெளியே குறிப்பிட்ட இடங்களில் தங்கியிருப்பவர்கள் தமது அடையாளம் தொடர்பான முழுத் தகவல்களையும், அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இன்றிலிருந்து 14 நாட்களுள் பதிவு செய்யவேண்டும் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதிகளை அல்லது தங்குமிடங்களை வெளியார்கள் தங்க என வாடகைக்கு விடுவோர் அவர்கள் பற்றிய முழு அடையாளங்களையும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவேண்டும். இவ்வாறு செய்யத்தவறினால் கடும்தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1992 ஆம் ஆண்டிற்கான கல்வித் திணை. நாட்காட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களம் 1992 ஆம் ஆண்டிற்கான திணைக்கள நாட்காட்டி ஒன்றை வெளியிட்டுள்ளது

யாழ்ப்பாணக்கல்வித்திணைக்களம் சார்ந்த அனைத்துத் திணைக்கள அலுவலர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அலுவலக அலுவலர், பாடசாலை அதிபர் ஆகியோருக்காகவே இது வெளியிடப்பட்டுள்ளது.

இதில் மாதாந்தபாடசாலை தவணை ஆரம்பம், முடிவு, உடற்பயிற்சி போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் (கிறிக்கற், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டிகள், வலைப்பந்து, தாச்சி, கிளித்தட்டு) கணித, விஞ்ஞான வினாவிடைப் போட்டிகள், சிரமதானம், கண்காட்சிகள், பண்ணிசைப் போட்டிகள், ஆசிரியர்களுக்கான சித்திரப் போட்டிகள் ஆகியன நடைபெறும் தினங்கள் மாதந்தோறும் வகைப் படுத்தப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஜனவரி 6 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்பிரல மூன்றாம் திகதி முதலாம் தவணை விடுமுறைக்காக மூடப்படும். மீண்டும் மே மாதம் நாலாம் திகதி ஆரம்பமாகும். இரண்டாம் தவணை யூலை மாதம் முப்பத்தோராம் திகதியுடன் முடிவடையும்.

ஆகஸ்ட்மாதம் முப்பத்தோராம் திகதி ஆரம்பமாகும் மூன்றாம் தவணை டிசம்பர்மாதம் நாலாம்திகதியுடன் முடிவடையும். (ச)

## செஞ்சிலுவை கவலை

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 10 ஆம் திகதி நடந்த சம்பவத்தை யிட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். குழுப்பொறுப்பாளர் க்ளோவ்டியோ பரன்ஸ் விடுத்த செய்திக் குறிப்பில் இச்சம்பவத்தில் எவரும் பரிதாபப்படும் வகையில் பாதிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## மாணவர், ஆசிரியர்; கிளி. ஆர்ப்பாட்ட பேரணி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இன்று ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடாத்த உள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டக் கூடியதாக இந்த ஊர்வலம் நடத்தப்படுகிறது

கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியிலிருந்து ஆரம்பமாகும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் கல்விப்பணிப்பாளர் பணிமனையிலும் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை சமர்ப்பிக்கும்.

### பயிற்சி

கவும் ஏனையோர் அவரவரது சொந்த மாவட்டங்களிலேயே நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### ஓய்வூதியம்

10-02-92 ஆம் திகதி தொடக்கம் ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களினது தை 1992 இற்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. ஓய்வூதியகாரர் குறிப்பிட்ட ஓய்வூதியத்தினை விரைவில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### அணுவால்

ஆண்டாக அனுசரிக்கப்போவதாக சுவிஸ்லாந்தில் பிரதமர் நரசிம்மராவிடம் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப் உறுதி அளித்திருந்தார். ஆனால் தற்போதைய அவரது நிலை அவரது உறுதிமொழிக்கு எதிரானதாக காணப்படுகிறது என்றார்.


## இறுதி யாத்திரை அறிவித்தல்

யாழ். ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை உரிமையாளர்

### திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்

திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (12-02-92) பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்குத் தகனம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்படும்.

63 பீ ஏ. தம்பிலேன்,
யாழ்ப்பணம்.
(சி/3914)

தகவல்
தி. ஜெயராசா
(ஜெகன்-பேரன்)

## நினைவு கூருகின்றோம் 1992-02-12

1986ஆம்ஆண்டு இதேதினத்தில் வவுனியா பூவரசங்குளத்தில் தேநீர்க் கடைக்குள் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 பொது மக்கள்.

1989ஆம்ஆண்டுஇந்தியப்படையினரால்படுகொலை செய்யப்பட்ட தாய், 2 மகள்மார், பேரக்குழந்தை

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்காப்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

சுரேஷ் (சிலாவத்தை, முல்லைத்தீவு)
கமல்ராஜ் (தீர்த்தக்கரை, முல்லைத்தீவு)
அஜித் (கரன் - முத்தையன் கட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி-3911)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது